தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

நந்தன, தை 24, திருவள்ளுவர் ஆண்டு – 2044

2013 பிப்ரவரி 6, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின்"

செய்ய வேண்டிய செயல்கள் பற்றி நன்றாகச் சிந்தித்துத் தக்க இடம் அறிந்து செய்தால் அதில் வெற்றி பெறுவதற்கு மன உறுதி என்னும் துணிவு தவிர வேறு துணை வேண்டாம்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

11—

சொந்தக் கட்டடம்

***21225—திரு. ஆர். சந்திரசேகர்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறை தொகுதி, மணப்பாறையில் உள்ள சார்நிலைக் கருவூலத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மணப்பாறை சார்நிலைக் கருவூலத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு ஏதுவாக நில ஒதுக்கீடு பெற திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு திருச்சிராப்பள்ளி மாவட்டக் கருவூல அலுவலர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். நிலம் ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான ஆணையினைப் பெற்று கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர் அவர்கள்.*

திரு. ஆர். சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னை தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உயர்த்திட அயராது உழைத்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மணப்பாறை தொகுதி, மணப்பாறையிலுள்ள சார்நிலைக் கருவூலம் சுமார் இருபது ஆண்டு காலமாகப் பழுதடைந்த வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மணப்பாறையிலுள்ள கருவூலமானது மூன்று ஒன்றியங்கள், ஒரு பேரூராட்சி மற்றும் ஒரு நகராட்சியை உள்ளடக்கியது. இந்தக் கருவூலத்தில் சுமார் 2,500 பென்சன்தாரர்கள் உள்ளனர். ஒரு நாளைக்கு, டிபார்ட்மென்டை சேர்ந்தவர்கள் சுமார் 130 பேரும், பொது மக்கள் சலான் கட்டுவதற்காக 200-லிருந்து 300 பேர் வரையும் வந்து செல்கின்றனர். அவர்களுக்குப் போதிய குடிநீர் வசதி, கழிவறை வசதி இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். அவர்கள் நலன் கருதி, அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய கட்டடத்தைக் கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பாறை சார்நிலைக் கருவூல*

2013 பிப்ரவரி 6]

அலுவலகத்திற்கு வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் 20 சென்ட் அளவில் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. வருவாய்த் துறையிடமிருந்து நுழைவு அனுமதி சான்றிதழ் பெறுவதற்காக அது நிலுவையில் உள்ளது. அந்தச் சான்றிதழ் விரைவில் பெறப்படும். சான்றிதழ் பெறப்பட்டவுடன் உடனடியாக போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர் அவர்கள்.*

திரு. ஆர். சந்திரசேகர்: *மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.*

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட பந்தலூர் தாலுகா செயல்படத் தொடங்கி 10 ஆண்டுகளுக்கு மேலாகிறது. ஆனால், அங்கு சார்நிலைக் கருவூலம் இல்லை. எனவே, அங்கே சார்நிலைக் கருவூலம் தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு சார்நிலைக் கருவூலம் அமைக்கப்பட வேண்டும் என்பதுதான் அரசினுடைய விதி. அதனை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைந்து செயல்படுத்துவதற்குரிய நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றது. கூடிய விரைவில் மாண்புமிகு உறுப்பினர் கேட்ட அந்தச் சார்நிலைக் கருவூலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.*

திரு. க. தினகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூலூர் தொகுதிக்குட்பட்ட பகுதியில், சுல்தான்பேட்டை ஒன்றியம், சூலூர் ஒன்றியம் ஆகிய இடங்களில் உள்ள மக்கள் 50, 60 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கோயம்புத்தூருக்கு போய்வர வேண்டும். அங்கே சார்நிலைக் கருவூலம் கிடையாது. அதனை வட்டமாகப் பிரித்து நான்கு வருடங்களாகிறது. எனவே, அரசு உடனடியாக கருவூலம் அமைத்துக் கொடுத்தால், அங்கே இருக்கின்ற மக்கள் பயன்பெறுவார்கள். இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: சூலூரில் ஒரு சார்நிலைக் கருவூலம் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட திங்கள் சந்தையிலே ஒரு பழைய கட்டடத்தில் கருவூலம் இருக்கிறது. அங்கு வசதியே இல்லை. காவல் பணியில் இருக்கும் காவல் துறை அதிகாரிகூட அங்கு வெளியிலே நிற்கக்கூடிய நிலை இருக்கிறது. எந்தவித அடிப்படை வசதியும் இல்லை. என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற அலுவலத்திற்குப் பக்கத்திலேதான் அந்த அலுவலகம் இருக்கிறது. அந்தப் பகுதி ஒரு முக்கியமான பகுதி. அங்கு எல்லா வசதியோடும் ஒரு சிறந்த கருவூலம் கட்டித் தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்ற அலுவலகக் கட்டடங்களுக்கு எல்லாம் கூடிய விரைவில்

2013 பிப்ரவரி 6]

படிப்படியாக அரசால் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள் கூறிய அந்தச் சார்நிலைக் கருவூலத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதியிலே சார்நிலைக் கருவூலம் பிரிட்டிஷார் காலத்திலே இருந்த குதிரை லாயத்திலே ஏறத்தாழ 130 ஆண்டு பழமையான ஒரு கட்டடத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றது. அந்த நிலையை மாற்றி அங்கே ஒரு புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற சார்நிலை அலுவலகங்களை மாற்றி அரசின் சார்பாக சொந்தக் கட்டடங்களில் படிப்படியாக கொண்டுவருவதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியினுடைய இலக்கு. ஆகவே, தமிழகத்தில் இருக்கின்ற, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற சார்நிலைக் கருவூலங்களை படிப்படியாக அரசினுடைய சொந்தக் கட்டடங்களில் கொண்டு வருவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. அதனுடைய முன்னோடியாக இந்த வருடத்தில் மட்டும் 14 சார்நிலைக் கருவூலங்களுக்கு நில ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. தலா ரூ.55 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். விரைவில் பணிகள் துவக்கப்படவிருக்கின்றன. அதற்குப் பின்னால் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற அனைத்து சார்நிலைக் கட்டடங்களுக்கும் படிப்படியாக அரசு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாட்டின் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் கருவூல அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது; அந்தக் கருவூலத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தருவதற்கு மானாமதுரை, புறவழிச் சாலையில், புதிய பேருந்து நிலையம் அருகில் அரசு நிலம் இருக்கின்றது. அந்த இடத்தில் ஒரு கருவூல அலுவலகம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதிலில் திரும்பத் திரும்பக் கூறிவிட்டேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற, தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற 14 சார்நிலைக் கருவூலங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு விரைந்து நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. படிப்படியாக அனைத்து சார்நிலைக் கருவூலங்களுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் எண்ணம் இனிக்கின்ற வகையில், நாளும் பல திட்டங்களை அள்ளித் தருகின்ற வண்ணத் தமிழ்நாட்டின் முதலமைச்சர், மாட்சிமைபொருந்திய டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித மலர்ப்பாதங்களைப் பணிவோடு வணங்கி, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியில் வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்ற சார்நிலைக் கருவூலத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர மாண்புமிகு*

அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் அவரவர் தொகுதியில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற சார்நிலைக் கருவூலங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படுமா என்ற கேள்வியை தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அனைவருக்கும் பொதுவான பதிலை நான் இங்கே குறிப்பிட்டேன். மீண்டும் அனைவருக்கும் பொதுவான பதிலை நான் இங்கே தர விழைகின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தில் தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்ற சார்நிலைக் கருவூலங்களுக்கு படிப்படியாக சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கின்றார்கள். இந்த வருடம் மட்டும் 14 சார்நிலைக் கருவூலங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. கூடிய விரைவில் தமிழகத்தில் தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற அனைத்து சார்நிலைக் கருவூலங்களுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

12—

குப்பைகள் எரித்தல்

***10911—திரு. பொன். ராஜா:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—